மலேசிய நண்பன்

30 September 2020, Wednesday

# மாவார் தனியார் மருத்துவமனையில் அதிநவீன ஸ்கேனிங் இயந்திரம்!

(துர்க்கா)



சிரம்பான், செப். 30- நாட்டில் முதல் முறையாக மாவார் தனியார் மருத்துவமனை அதிநவீன தொழில்நுட்பத்தையும் துல்லியமான விவரங்களை வழங்க கூடிய எம்.ஆர்.ஐ ஸ்கேனிங் இயந்திரம் பொருத்தப்படும் என தெரி விக்கப்பட்டது. ராசாவில் அமைந்துள்ள மாவார் மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேனிங் இயந்திரம் பொருத்தும் நடவடிக்கையை அதன் தலைவர் டத்தோ லீ தியான் ஹோக் தொட்க்கி வைத்த நிகழ்வில் தலைமை மருத்துவ இயக்குநர் டத்தோ டாக்டர் விஜயசிங்கம் பிள்ளை, டத்தோ லோகேந்திரன், டத்தோ ஸ்ரீ டாக்டர் சத்தியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நோயாளிகளின் பிரச்சினையை துல்லியமாக கண்டுபிடித்து சிகிச்சை வழங்குவதற்கும், நேரத்தை மிச்சப்படுத்த உதவுவதுடன்,



50 சதவீதம் வேகத்தை கொண்ட இந்த இயந்திரம் வெ. 4.31 மில்லியன் செலவில் வாங்கப்பட்டிருப்பதாக அவர் விளக்கினார். ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட இந்த ஸ்கேனர் இயந்திரம் 70 சென்டிமீட்டர் சுரங்கப்பாதை அளவு கொண்டதுடன், உடல் பருமன் உள்ள நோயாளிகளுக்கு சுலபமாகப் பயன்படுத்த உதவும் என்றார் அவர். மாவார் மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேனர் இயந்திரம் பொருத்தியதும், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் பார்வையிட்டு அங்கீகாரம் வழங்கிய பிறகு, வரும் டிசம்பர் மாதம் நோயாளிகளின் பயன்பாட்டிற்கு முழுமையாகப் பயன்படுத்தப்படும் என மெட்டிரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநருமான டத்தோ லீ தீயான் ஹோக் மேலும் நம்பிக்கையுடன் கூறினார்.